ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

TNPSC GROUP I, II & IV, TET

நாள்: 02-05-2021 நேரம் : காலை 10.00 மணி

இடம் : பழைய ஆயக்குடி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்

GROUP II - மாதிரித்தாள் - I

இந்த வாரத்திற்கான (02.05.2021) (PDF) வழங்கியவர்,

கோவை போக்குவரத்து அலுவலகத்தில் பணி புரியும் நமது மாணவர்

திரு. **B.கண்ணன்** அவர்களுக்கு

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையத்தின்

சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவண்,

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

இடம் : நந்தவன மரத்தடி, புதிய காவல்நிலையம், பழையஆயக்குடி.

பஸ் நிறுத்தம் : ஆயக்குடி கோச்சிங் சென்டர், புதிய காவல்நிலையம், பழையஆயக்குடி

குறிப்பு : **திறனறிவு, நடப்பு நிகழ்வுகள், அரசியல், வரலாறு, புவியியல், தமிழர் பண்பாடு ஆகிய பகுதிகளுக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டே இருங்கள் ! 160/200 Over ... வெற்றி உறுதி !**

அனைவரும் கண்டிப்பாக **முகக்கவசம்** (MASK) அணியவும்.

மாதிரி வினாத்தாள் - I

1. சரியான கூற்று எது?
   1. தேசிய கல்வி கொள்கை 1968-ஆம் ஆண்டு முதன் முதலில் உருவாக்கப்பட்டது.
   2. 1976-ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தின் 42-வது திருத்தத்தின்படி கல்வி பொதுப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.
   3. 1986, 1992 ஆண்டுகளில் கல்விக் கொள்கை திருத்தப்பட்டது.
   4. 2016-ஆம் ஆண்டு டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் தலைமையில் புதிய கல்விக்கொள்கைக்கு குழுவும், 2019-ம் ஆண்டு கஸ்தூரி ரங்கன் தலைமையில் குழுவும் அமைக்கப்பட்டது, புதிய கல்வி கொள்கை 2020-ல் உருவாக்கப்பட்டது.
   5. 10+2+3 பாடத்திற்குப் பதிலாக புதிய கல்வி கொள்கை 5+3+3+4 என மாற்றப்பட்டுள்ளது.
   6. புதிய கல்வி கொள்கை 21 பிராந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

   a) 1, 2, 3, 4 b) 2, 3, 4, 5 c) 1, 3, 4, 6 **d) அனைத்தும்**

2. சொத்து விவரங்களை கொண்ட 'இ-அட்டை' வழங்கும் ''ஸ்வாமித்வா'' திட்டத்தை பிரதமர் மோடி 24.04.2021 அன்று எந்த மாநிலத்தில் தொடங்கினார்?

   a) டெல்லி **b) ஹரியானா** c) குஜராத் d) மேற்குவங்கம்

3. ''தேசிய பஞ்சாயத்துராஜ் தினம்''?

   a) ஏப்ரல் 24 b) ஏப்ரல் 25 c) ஏப்ரல் 22 d) ஏப்ரல் 15

4. 53 மாலுமிகளுடன் மாயமான நீர்மூழ்கி கப்பல் ''கே.ஆர்.ஐ. நங்கலா - 402'' எந்த நாட்டுக்கு சொந்தமானது?

   a) இந்தியா b) இலங்கை **c) இந்தோனேசியா** d) ஜப்பான்

5. ஏசியான் (ASEAN) 2021 - கூட்டமைப்பு உச்சிமாநாடு எங்கு நடைபெற்றது?

   a) ஜகார்த்தா b) மணிலா c) கோலாலம்பூர் d) பேங்ஹாங்

6. சுப்ரீம் கோர்ட்டின் 48-வது புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள 'நுதலபதிவெங்கடரமணா' பதவியேற்ற நாள்?

   a) 25.04.2021 b) **24.04.2021**
   c) 23.04.2021 d) 22.04.2021

7. தேசிய பஞ்சாயத்துராஜ் தினம் ஆண்டுதோறும் ஏப்ரல் 24-ம் தேதி எந்த ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது?

   a) **2010** b) 2005 c) 2015 d) 2020

8. ஆக்ஸிஜன் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டால் தீர்வு காண துவக்கப்பட்டுள்ள 'கால் சென்டர்' எண்?

   a) 101 b) 102 c) 103 **d) 104**

9. 'விவாத் சி விஸ்வாஸ்' திட்டத்துடன் தொடர்புடைய துறை?

   a) **வருமானவரி** b) நிதி c) நீதி d) கல்வி

10. 'உலக மலேரியா தினம் ஏப்ரல் - 25' 2021-ன் மையக்கருத்து?

    a) **பூஜ்யம் மலேரியா இலக்கை அடைதல்** b) கொரோனாவை ஒழிப்போம்
    c) மலேரியா இல்லா உலகம் d) வெல்வோம் கொரோனாவை !

11. பருவநிலை மாற்றம் தொடர்பாக சமீபத்தில் எந்த நாட்டில் மாநாடு நடைபெற்றது?

    a) **அமெரிக்கா** b) இந்தியா c) சுவீடன் d) சீனா

12. 93-வது ஆஸ்கர் விருது பெற்ற நோமட்லேண்ட் திரைப்படத்தின் இயக்குனர்?

    a) **குளோயி சாவ்** b) கேத்தரின் பிக்லோ
    c) ஆண்டனி ஹாப்கின்ஸ் d) பிரான்சஸ் மெக்டார்மண்ட்

13. உயர்நீதி மன்றங்களில் தற்காலிக நீதிபதிகளை நியமிப்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் ..... பிரிவு அனுமதி அளிக்கிறது?

    a) **224 (ஏ)** b) 223 (ஏ) c) 222 (ஏ) d) 221 (ஏ)

14. பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு?
a) 2012 b) 2014 c) **2015** d) 2016

15. ஏப்ரல் 22, 2021 உலக பூமி தினத்தின் மையக்கருத்து?
a) **நம் பூமியை மீட்டெடுப்போம்** b) Co_2 குறைப்போம்
c) மாசில்லா நாடு d) பூமியை சுத்தம் செய்வோம்

16. தமிழ்நாடு மாநில மனிதஉரிமைகள் ஆணையத் தலைவர்?
a) **எஸ். பாஸ்கரன்** b) H.L. தத்து
c) லோகேஷ்வர் d) சஞ்ஜிப் பானர்ஜி

17. உலகின் மிகப்பெரிய சரக்கு கப்பலான ''எவர்கீரீன்'' எந்த நாட்டுக்குச் சொந்தமானது?
a) சீனா b) இந்தியா c) **ஜப்பான்** d) இந்தோனேஷியா

18. உலகின் முதல் கொரோனா தடுப்பூசி?
a) **ஸ்புட்னிக்-வி** b) கோவாக்சின் c) கோவிஷீல்டு d) 2016

19. சரியான கூற்று எது?
1. மத்திய அரசு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பயன்பாட்டுக்கு அனுமதி அளித்த ஆண்டு 1989.
2. 1998-ம் ஆண்டு சோதனை முயற்சியாக 3 மாநிலத் தேர்தல்களில் குறிப்பிட்ட சில தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.
3. 1999-ம் ஆண்டு கோவா மாநிலத் தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.
4. 2000-ம் ஆண்டுகளிலிருந்து அனைத்துத் தேர்தல்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
5. ஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களும், 3840 வாக்குகள் வரை பதிவு செய்யலாம்.
a) 1, 3, 4, 5 b) 2, 3, 4, 5 c) 1, 4, 5 d) **அனைத்தும்**

20. 2022 - காம்ன்வெல்த் விளையாட்டுப் போட்டி நடத்தும் நாடு?
a) இந்தியா b) **இங்கிலாந்து** c) ஆஸ்திரேலியா d) நியூசிலாந்து

21. சர்வதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு யாருக்கு வனபுத்தாக்க விஞ்ஞானி விருதை வழங்கியுள்ளது?
a) **கிரிதி கரந்த்** b) மலாலா c) கிரேட்டா தன்பர்க் d) அந்தோனியா குட்டரஸ்

22. உலக அறிவுசார் சொத்துரிமை தினம்?
a) ஏப்ரல் 25 b) **ஏப்ரல் 26** c) ஏப்ரல் 27 d) ஏப்ரல் 28

23. பத்திரிக்கைச் சுதந்திரத்தில் முதலிடம் பிடித்த நாடு?
a) **நார்வே** b) பின்லாந்து c) சுவீடன் d) டென்மார்க்

24. சுசில் சந்திரா இந்தியாவின் எத்தனையாவது தலைமை தேர்தல் அதிகாரி?
a) 23 b) **24** c) 25 d) 26

25. கரியமில வாயுவை சுமார் 50% வெளியிடும் நாடுகள்?
a) **அமெரிக்கா, சீனா** b) ரஷ்யா, ஜப்பான்
c) இந்தியா, இந்தோனேஷியா d) பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்

26. உலக ஹோமியோபதி தினம்?
a) ஏப்ரல் 7 b) **ஏப்ரல் 10** c) ஏப்ரல் 5 d) ஏப்ரல் 13

27. வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்)?
a) ஜனவரி 7 b) ஜனவரி 8 c) **ஜனவரி 9** d) ஜனவரி 10

28. சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் நீதிபதிகள் எத்தனை பேர்?
a) 75 b) 56 c) **19** d) எதுவுமில்லை

29. "Secularism" என்ற பதத்தை உருவாக்கியவர்?
a) **ஜேக்கப் ஹோல்யோக்** b) நேரு
c) அம்பேத்கர் d) எதுவுமில்லை

30. அரசியலமைப்புச் சட்டத்துடன் எந்த பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமை பற்றி குறிப்பிடுகிறது?
a) பகுதி II, பிரிவு 5 -12 b) **பகுதி II, பிரிவு 5 -11**
c) பகுதி II, பிரிவு 5 -6 d) பகுதி I, பிரிவு 5 -11

31. மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றுள் யாரை தேர்ந்தெடுப்பதில் பங்குபெறுகின்றனர்?
1. குடியரசுத்தலைவர் 2. துணைகுடியரசுத்தலைவர்
3. ராஜ்யசபை உறுப்பினர்கள் 4. சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்
a) 1, 2, 3 b) 1, 3 c) **1, 3, 4** d) அனைத்தும்

32. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது அரசியலமைப்பின் 15-வது திருத்தத்தின் படி 60-லிருந்து 62-ஆக உயர்த்தப்பட்ட ஆண்டு?
a) 1950 b) 1951 c) **1963** d) 1976

33. தவறான கூற்று எது?
a) சட்டமன்ற மேலவை ஒரு நிலையான அவை
b) சட்டமேலவை உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுபவர்
c) சட்டமேலவை உறுப்பினர்களின் பதவிகாலம் 6 ஆண்டுகள்
d) **சட்டமேலவை உறுப்பினராக வயது வரம்பு 35**

34. இந்தியாவின் டெட்ராய்ட் எனப்படும் சென்னை நகரம் வாகன ஏற்றுமதியில் .....% பங்கினை கொண்டுள்ளது?
a) 40% b) 50% **c) 60%** d) 80%

35. கடல்நீரின் ஆழம் பாதோம் (FATHOM) என்ற அலகில் அளக்கப்படுகிறது. ஒரு பாதோம் என்பது?
a) **6 அடி அல்லது 1.8 மீ** b) 3 அடி அல்லது 1.5 மீ
c) 2 அடி அல்லது 1 மீ d) 12 அடி அல்லது 3.6 மீ

36. சூரியக்குடும்பத்தில் காலை மற்றும் மாலை நட்சத்திரம் என்று அழைக்கப்படுவது?
a) புதன் b) வெள்ளி c) யுரேனஸ் d) சனி

37. சூரியக் குடும்பத்தில் 30 வளையங்களுடன் காணப்படும் கோள் எது?
a) வியாழன் b) செவ்வாய் c) புவி d) சனி

38. புவித் தன்னைத்தானே ஒரு முறை சுற்றிவர எடுத்துக்கொள்ளும் நேரம்?
a) 23 மணிநேரம், 56 நிமிடங்கள், 4 வினாடிகள்
b) 27 மணிநேரம், 17 நிமிடங்கள், 2 வினாடிகள்
c) 24 மணிநேரம், 56 நிமிடங்கள், 4 வினாடிகள்
d) 10 மணிநேரம், 7 நிமிடங்கள், 4 வினாடிகள்

39. காற்று அதிகமாக உள்ள கோள் எது?
a) சனி b) நெப்டியூன் c) வியாழன் d) செவ்வாய்

40. சூரியன் புவிக்கு மிக அருகில் காணப்படும் நாள்?
a) ஜனவரி 3 b) ஜூலை 4 c) செப்டம்பர் 5 d) டிசம்பர் 4

41. ஜூன் 21 இல் சூரிய ஒளிக்கதிர் செங்குத்தாக விழுவது?
a) கடக ரேகை b) மகர ரேகை
c) பூமத்திய ரேகை d) ஆர்டிக் வட்டம்

42. கங்கையாறு எங்கிருந்து உற்பத்தியாகிறது?
a) பனியாறு b) ஊற்று c) ஏரி d) நீர்கொள்படுகை

43. இளைய பெருங்கடல் எனப்படும் பெருங்கடல் .....?
a) இந்தியப் பெருங்கடல் b) தென் பெருங்கடல்
c) ஆர்டிக் பெருங்கடல் d) அட்லாண்டிக் பெருங்கடல்

44. அனைத்து பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட ஒரே கடல் .....?
a) சாக்கடல் b) சர்காகோ கடல் c) தென் சீனக்கடல் d) ஏரல் கடல்

45. பின்வரும் வளிமண்டல அடுக்குகளில் வானிலை அடுக்க என அறியப்படுவது எது?
a) அடியடுக்கு b) படையடுக்கு c) வெப்ப அடுக்கு d) இடையடுக்கு

46. ஜெட் விமானங்கள் பறக்க ஏதுவான அடுக்கு எது?
a) அடியடுக்கு b) படையடுக்கு c) இடையடுக்கு d) வெளியடுக்கு

47. பின்வரும் வளிமண்டல அமைப்பில் சூரியனிடம் இருந்து வரும் புற ஊதாக்கதிர்களை உட்கிரகித்து புவி வெப்பமடையாமல் பாதுகாக்கும் அடுக்கு எது?
a) அடியடுக்கு b) ஓசோன் அடுக்கு c) வெப்ப அடுக்கு d) வெளியடுக்கு

48. காற்றின் வேகத்தை அளவிடப் பயன்படும் கருவி?
a) அழுத்தமானி b) ஈரப்பதமானி c) வெப்பமானி d) காற்றுமானி

49. காற்றில் உள்ள சார்பு ஈரப்பதத்தை அளவிடப் பயன்படும் கருவியின் பெயர் யாது?
a) ஈரப்பதமானி b) அழுத்தமானி c) வெப்பமானி d) உயரம் காட்டும் கருவி

50. இந்திய அரசியலமைப்புச்சட்டம் .....வது பிரிவின் படி ஒவ்வொரு மாநிலத்திலும் உயர்நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது?
a) **214** b) 226 c) 212 d) 219

51. லோக் அதலாத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு?
a) 1986 b) **1987** c) 1988 d) 1989

52. 1991-ஆம் ஆண்டு அரசியலமைப்பின் .....வது சட்டதிருத்தத்தின்படி டெல்லி தேசிய தலைநகர் நிலையைப் பெற்றது?
a) 66 b) 67 c) 68 d) **69**

53. இந்திய அரசியலமைப்புச்சட்டம் ..... முதல் ..... வரை உள்ள சட்டப்பிரிவுகள் மாநில அரசின் நிர்வாக பணிகளைப் பற்றி தெளிவாக குறிப்பிடுகிறது?
a) **152 - 237** b) 153 - 230 c) 226 - 230 d) அனைத்தும்

54. தமிழ்நாட்டில் சட்டமேலவை ஒழிக்கப்பட்ட நாள்?
a) செப்டம்பர் 01 - 1986 b) அக்டோபர் 01 - 1986
c) **நவம்பர் 01 - 1986** d) டிசம்பர் 01 - 1986

55. திருநங்கைகளுக்கு குடும்ப அட்டை வழங்கிய முதல் மாநிலம்?
a) **தமிழ்நாடு** b) ஆந்திரா c) கேரளா d) தெலுங்கானா

56. மாநில சமூக இடஒதுக்கீடு கொள்கையில் அடிப்படை உரிமையில் முதல் சட்டதிருத்தத்தை கொண்டு வந்தவர்?
a) அம்பேத்கர் b) V.V. சுப்பிரமணிய ஐயர் c) **ஜவஹர்லால் நேரு** d) பெரியார்

57. ''பாதுகாக்க, வளர்க்க, விவேகமாக உபயோகிக்க'' - என்ற முழக்கத்துடன் தொடர்புடைய இயக்கம்?
a) சிப்கோ b) **அபிக்கோ** c) பர்தோலி d) ஒத்துழையாமை

58. தமிழகத்தில் .....விழுக்காடு நிலப்பகுதியில் காடுகள் பரவியிருக்கிறது?
a) 15 b) 16 c) **17** d) 18

59. வறுமை ஒழிப்பிற்கும், நீடித்த வளர்ச்சி கொண்டு வருவதற்கும் திறமையான ஆளுமைத்தன்மை அடைவதற்குமுன் நிறைவாக பாலின சமத்துவம் அமைகிறது என்று கூறியவர்?
a) **கோபி அன்னன்** b) அந்தோணிய குட்டரஸ்
c) கிரேட்டா தன்பர்க் d) மலாலா

60. 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழக மக்கள் தொகை?
a) **6.24 கோடி** b) 7.21 கோடி c) 8.34 கோடி d) 5.98 கோடி

61. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஒரு நிமிடத்தில் எத்தனை வாக்குகள் பதிய முடியும்?
a) 1 b) 2 c) 3 d) **5**

62. மின் சார்ந்த தூண்டலை கண்டறிந்தவர்?
a) **மைக்கேல் பாரடே** b) ஆர்ஸ்டெட்
c) ஆம்பியர் d) ஃபிளமிங்

63. மின்னோட்டத்தின் காந்த விளைவை கண்டறிந்தவர்?
a) **ஆர்ஸ்டெட்** b) பாரடே c) ஓம் d) ஆம்பியர்

64. நீரில் ஒளியின் வேகம்?
a) $3x10^8$ மீ/வி b) $1.24x10^8$ மீ/வி c) **$2.25x10^8$ மீ/வி** d) $1.96x10^8$ மீ/வி

65. ''ஒளி விலகல் எண்'' இதன் அலகு?
a) மீ/வி b) மீ/வி^{2} c) மீ.வி d) **அலகு இல்லை**

66. எது புல்லரீன் அல்லி?
a) C_{60} b) C_{50} c) C_{120} d) **C_{12}**

67. நிலக்கரி வாயுவில் மீத்தேன் சதவிகிதம்?
a) 80% b) **30%** c) 50% d) 75%

68. யூரியாவின் உருகுநிலை?
a) 54^0C b) 80^0C c) **135^0C** d) 801^0C

69. ஏவுகணை இயக்கதிற்கான விதி?
a) **நியூட்டனின் மூன்றாவது இயக்க விதி** b) கூலும் விதி
c) பாயில் விதி d) எதுவும் இல்லை

70. அண்மை கால வகைப்பாட்டினை வெளியிட்டவர்?
a) பெந்தம் - ஹூக்கர் b) லின்னேயஸ்
c) அடால்ஃங்ளர் d) **ஆர்தர் க்ராங்க் விஸ்ட்**

71. மனித மூளையின் எடை சுமார் ..... கிலோ கிராம்?
a) 2 b) 1 c) **1.36** d) 3.5

72. தமிழக அரசு பெரியார் கருத்தின்படி எழுத்து சீர்திருத்தத்தில் சில கூறுகளை நடைமுறைப்படுத்திய ஆண்டு?
a) 1980 b) **1978** c) 1979 d) 1982

73. பெரியார் நடத்திய ஆங்கில இதழ்?
a) ரிபப்ளிக் b) இன்டிபண்டன்ஸ் c) ட்ரூத் d) **ரிவோல்ட்**

74. 'மணநூல்' எனப்படும் சீவகசிந்தாமணியில் உள்ள 'கலம்பகங்கள்' எத்தனை?
a) 10 b) 11 c) 12 d) **13**

75. 'வருக்கை' என்பது?
a) அன்னாச்சிப்பழம் b) வாழைப்பழம்
c) **பலாப்பழம்** d) மாம்பழம்

76. உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து - இக்குறளில் அமைந்துள்ள அணி?
a) உவமை அணி b) **ஏகதேச உருவக அணி**
c) சொற்பொருள் பின்வருநிலையணி d) எடுத்துக்காட்டு உவமை அணி

77. 'யவனப்பிரியா' என்பது எதனைக் குறிக்கும்?
a) **மிளகு** b) முத்து c) சங்கு d) தந்தம்

78. சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகமே என்று உறுதி செய்தவர்?
a) சர்.மார்டிமர் வீலர் b) ஆர்.டி.பானர்ஜி
c) சர்.ஜான் மார்ஷல் d) ஹீராசு பாதிரியார்

79. சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்கவும்?
தமிழகத்தில் முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்
1. அத்திப்பாக்கம், அரிக்கமேடு 2. ஆதிச்சநல்லூர், திருகாம்புலியூர்
3. தாமிரபரணி ஆற்றங்கரை, அத்திரப்பாக்கம் 4. பூம்புகார், தரங்கம்பாடி
a) 1, 2 சரியானவை b) 1, 2, 3 சரியானவை
c) 2, 4 சரியானவை d) 1, 3, 4 சரியானவை

80. தமிழகத்தில் ..... பல்லவ மன்னர் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது?
a) மகேந்திரவர்மன் b) நரசிம்மவர்மன்
c) நந்திவர்மன் d) நிருபதுங்கள்

81. நடுகல் பற்றிய குறிப்புகள் இடம் பெறாத நூல்?
a) தொல்காப்பியம் b) புறநானூறு
c) அகநானூறு d) பரிபாடல்

82. 'வேலன் வெறியாட்டு விழா' பற்றிக் குறிப்பிடாத நூலைத் தேர்ந்தெடுக்க?
a) திருமுறுகாற்றுப்படை b) பட்டினப்பாலை
c) முல்லைப்பாட்டு d) குறிஞ்சிப்பாட்டு

83. தமிழகத்தில் சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் மிகப்பெரிய திருவிழா?
a) சித்திரைத் திருவிழா b) தீபத் திருவிழா
c) மகாமத் திருவிழா d) ஆதிரைத் திருவிழா

84. பொருந்தாத இணையைச் சுட்டிக்காட்டுக?
a) தொல்காப்பியப் பொருளதிகாரம் - பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை
b) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு - மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை
c) பதிற்றுப்பத்து - மன்னரின் போர்த்திறம், கொடைத்திறம்
d) இரட்டைக்காப்பியங்கள் - வளையாபதி, குண்டலகேசி

85. பொருத்துக?
a) பொருந்தாக் காதல் - 1. பொதுவியல் திணை
b) ஒருதலைக் காமம் - 2.பாடாண் திணை
c) ஆண் மகனது வீரம் - 3.பெருந்திணை
d) ஒன்பது திணைகளில் கூறாதவை - 4.கைக்கிளை

	A	B	C	D
a	4	3	2	1
b	2	3	4	1
c	3	4	2	1
d	3	4	1	2

86. சர் ஜான் மார்ஷல், இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்த நகரங்கள் என உறுதிப்படுத்தியவை?
1. மொகஞ்சதாரோ 2. ஹரப்பா 3.குந்தா 4. தானூர்
a) 1, 2 சரியானவை b) 3, 4 சரியானவை
c) 2, 3 சரியானவை d) 1, 4 சரியானவை

87. பண்டைய சிந்துவெளி பகுதியில் வழங்கப்பட்ட பெயர்களுள் எவையெவை தற்போதைய பாகிஸ்தானில், இன்றும் வழக்கத்தில் உள்ளன?
1. ஆரணி 2.கொற்கை 3.சின்னமனூர் 4.மைலம்
a) 1, , 3 சரியானவை b) 1, 2, 3 தவறானவை
c) 1, 2, 4 சரியானவை d) 1, 2, 4 தவறானவை

88. தமிழர்களின் வீட்டுவாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, எதற்கு அடையாளமாகக் கருதப்படுகிறது?
a) விருத்தோம்பல் b) வீரம் c) நட்பு d) வாய்மை

89. பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூலில், இடம்பெற்றுள்ள இரு அதிகாரங்கள்?
a) எழுத்து, சொல் b) எழுத்து, பொருள்
c) சொல், பொருள் d) சொல், யாப்பு

90. பண்டைய நாளில் வாழ்ந்த இசைக்கலைஞர்கள் ஏழிசைத் திறங்களை இசைக்க பயன்படுத்திய கருவிகள்?
1. குழல் 2.கஞ்சக்கருவி 3.தோல்கருவி 4.யாழ்
a) 1, 4 சரியானவை b) 1,3 சரியானவை
c) 1,2 சரியானவை d) 3, 4 சரியானவை

91. கோயில் விமானத்தில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை?
a) நான்கு b) ஐந்து c) மூன்று d) ஆறு

92. பரவை நாச்சியாரை மணந்து கொண்டவர்?
a) மாணிக்கவாசகர் b) சுந்தரர்
c) திருநாவுக்கரசர் d) திருஞானசம்பந்தர்

93. முல்லை நிலமக்கள், எம்மரத்தைத் தாய் தெய்வமாக வழிபட்டனர்?
a) அரசமரம் b) ஆலமரம்
c) புன்னைமரம் d) வேப்பரமரம்

94. சித்திரசபை அமைந்துள்ள இடம்?
a) குற்றாலம் b) திருவாலங்காடு
c) திருநெல்வேலி d) சிதம்பரம்

95. பொருந்தாத கூற்றைக் கண்டறிக?
விஜய தசமி என்பது,
a) வெற்றியைத் தருகின்ற நாள் b) கல்வியைத் தொடங்கும் நாள்
c) கார்த்திகை மாதத்தில் வரும் நாள் d) செல்வத்தைத் தருகின்ற நாள்

96. $2^8 x 2187$
$3^5 x 32$ =?
a) **72** b) 52 c) 62 d) 42

97. $2^{m-1} + 2^{m+1} = 640$ எனில் 'm' மதிப்பு?
a) 6 b) 7 c) **8** d) 9

98. $P+2Q = 18$ மற்றும் $pq=40$ எனில் $2/P + 1/Q$ =?
a) 8/20 b) **9/20** c) 7/20 d) 11/20

99. $a-b=3$, $ab=5$ எனில் a^3-b^3 =?
a) 15 b) 18 c) 62 d) **72**

100. $(x+1)$ செ.மீ பக்க அளவுள்ள கன சதுரத்தின் கனஅளவு?
a) $\mathbf{x^3+3x^2+3x+1}$ b) x^3-3x^2-3x-1
c) x^3+3x^2+3x-1 d) None

101. ஒரு முக்கோணத்தின் கோணங்கள் 2 : 3 : 4 என்ற விகிதத்தில் உள்ளது எனில் அம்முக்கோணத்தின் பெரிய கோணத்திற்கும், சிறிய கோணத்திற்கம் உள்ள வித்தியாசம்?
a) $\mathbf{40^0}$ b) 30^0 c) 20^0 d) 60^0

102. அடுத்தடுத்த மூன்று ஒற்றை எண்களின் கூடுதல் 75 எனில் பெரிய எண் எது?
a) **27** b) 25 c) 23 d) 21

103. ஒரு செவ்வகத்தின் நீளமானது அதன் அகலத்தின் மூன்றில் ஒரு பங்கு அச்செவ்வகத்தின் சுற்றளவு 64 மீ எனில் செவ்வகத்தின் நீளம்?
a) 24 b) **8** c) 12 d) 6

104. தேன்மொழியின் தற்போதைய வயது முரளியின் வயதை விட 5 ஆண்டுகள் அதிகம். 5 ஆண்டுகளுக்கு முன் தேன்மொழிக்கும் முரளிக்கும் இடையே இருந்த வயது விகிதம் 3 : 2 எனில் அவர்களின் முரளி வயது?
a) **15** b) 20 c) 35 d) 25

105. ஆண்டுக்கு 5% வட்டி வீதத்தில் ஓர் ஆண்டிற்கு ரூ.500 ஐ தனி வட்டியாக தரும் அசல் எவ்வளவு?
a) 50,000 b) 30,000 c) **10,000** d) 5,000

106. ஒரு நபரின் வருமானம் 10% அதிகரிக்கப்பட்டு பிறகு 10% குறைக்கப்படுகிறது எனில் அவருடைய வருமானத்தில் ஏற்படும் மாற்றம்?
a) **1% குறைவு** b) 1% அதிகம் c) மாற்றம் இல்லை d) 2% குறைவு

107. ஒரு பள்ளி தேர்தலில் A, B, C ஆகிய மூன்று வேட்பாளர்கள் முறையே 153, 245 மற்றும் 102 வாக்குகளை பெறுகின்றனர் எனில் வெற்றியாளர் பெற்ற வாக்கு சதவீதம் ..... ஆகும்?
a) 48% **b) 49%** c) 50% d) 40%

108. 15% ஆண்டு வட்டியில் 3 ஆண்டுகளுக்கு கிடைக்கும் தனிவட்டிக்கும் கூட்டு வட்டிக்கும் இடையேயான வித்தியாசம் ரூ.1134 எனில் அசல்?
a) 12000 **b) 16000** c) 20000 d) 10000

109. X, Y, Z ஆகியவர் ஒரு வேலையை முறையே 4, 6 மற்றம் 10 நாட்களில் முடிப்பர். X, Y, Z ஆகிய மூவருக்கும் ரூ. 31000 கிடைக்கிறது எனில் 'A' யின் பங்கு எவ்வளவு?
a) 15000 b) 10000 c) 6000 d) 31000

110. A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை 12 நாட்களிலும், B மற்றும் C 15 நாட்களிலும், C மற்றும் A 20 முடித்தால் மூவரும் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?
a) 20 b) 30 c) 60 **d) 10**

111. 1, 4, 9, 61, 52, 63, ...?
a) **94** b) 49 c) 46 d) 18

112. ஒரு நிறுவனம் 20 நாட்களுக்கு 15 ஆட்களுக்கு ரூ. 6 லட்சம் ஊதியமாக வழங்குகிறது எனில் 12 நாட்களுக்க 5 ஆட்களுக்கு ஊதியமாக வழங்கப்படும் தொகை?
a) 1 லட்சம் b) **1.2 லட்சம்** c) 1.5 லட்சம் d) 2.2 லட்சம்

113. ஒரு முக்கோணத்தின் பக்கங்கள் 5 : 12 : 13 என்ற விகிதத்தில் இருந்தால் அது ..... முக்கோணம் ஆகும்?
a) **செங்கோணம்** b) விரிகோணம்
c) இருசமபக்க முக்கோணம் d) அசமபக்க முக்கோணம்

114. நீளம் 21 செ.மீ மற்றம் மூலைவிட்டம் 29 செ.மீ அளவுடைய ஒரு செவ்வகத்தின் பரப்பு?
a) 609 செ.மீ^{2} b) 580 செ.மீ^{2} c) **420 செ.மீ^{2}** d) 210 செ.மீ^{2}

115. 200, 15, 20, 103, 3, 197 - இன் வீச்சு?
a) **197** b) 185 c) 194 d) 180

116. 7-ஐ ஓர் இலக்கமாக கொண்ட ஈரிலக்க எண்கள் எத்தனை உள்ளன?
a) 10 b) **18** c) 19 d) 20

117. பதினொறாவது பிபனோசி எண்?
a) 55 b) 77 c) **89** d) 144

118. இரண்டு எண்களின் மீப்பெரு பொது காரணி ..... எனில் அவை சார்பகா எண்கள்?
a) 2 b) 3 c) 0 d) **1**

119. 10 அளவுகோள்களின் விற்ற விலையானது 15 அளவு கோள்களின் அடக்க விலைக்குச் சமம் எனில் இலாப சதவிகிதம்?
a) 50 % b) 40 % c) 25 % d) 30 %